**CC.No**.77/2024

**Date**: 14.05.2026

**எ.ம.சா.** 1. வனிதா, க/பெ. சீனிவாசன், 47/2026, காரைக்குடி,
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.05.2026**

**குறுக்கு விசாரணை**

1) புகார்தாரரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் LND மகளிர் குழு மூலமாக தெரியும். மகளிர் குழு கூட்டத்திற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். குழுவில் இருந்து கடன் எதுவும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. மகளிர் குழுவில் சேர்ந்தற்கான ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார்தாரரை மகளிர் குழுவில் வைத்துதான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். நான் புகார்தாரர் வீட்டில் பணி செய்துள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரரின் வீட்டில் வேலைக்கு போவதற்கு முன்பாகவே மகளிர் குழுவில் இருந்தேனா என்றால் இல்லை. அதற்கு பின்புதான் சேர்ந்தேன். மகளிர் குழுவிற்காக நான் புகார்தாரருக்கு எந்த ஒரு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும், பெற்ற கடனிற்காகத்தான் புகார்தாரருக்கு வழக்கு காசோலை கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. எந்த இடத்தில் எங்கு வைத்து எப்போது காசோலை கொடுத்தேன் என்றால் புகார்தாரரின் வீட்டில் வைத்து மகளிர் குழுவிற்காக கொடுத்தேன், தேதி, வருடம் நினைவில்லை.

2) எத்தனை வருடம் புகார்தாரர் வீட்டில் பணி பார்த்தேன் என்றால் 2017 முதல் 4 வருடங்கள் பணி பார்த்தேன். பணி பார்க்கும்போது புகார்தாரரிடம் இருந்து கடன் பெற்றிருந்தேன் என்றால் சரிதான். கைமாற்று கடனாக ரூ.60 ஆயிரம் பெற்றிருந்தேன். அதில் எவ்வளவு தொகை திருப்பி செலுத்தியுள்ளேன் என்றால் ரூ.60 ஆயிரம் திருப்பி செலுத்தியுள்ளேன். அந்த தொகையை திருப்பி செலுத்தியதற்கு ஆவணம் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன், எ.ம.சா.ஆ. 2 ஆகும். கடன் பெற்ற தொகை அனைத்தையும் திருப்பி செலுத்தியுள்ளதாக எ.ம.சா.ஆ.2 ல் உள்ளதா என்றால் இல்லை, இறுதியாக கொடுத்த தொகை மட்டும் குறிப்பிட்டுள்ளது. காவல்நிலையத்தில் புகார் எதற்காக கொடுத்தேன் என்றால் பெற்ற ரூ.60 ஆயிரத்தை திருப்பி செலுத்தியபின்பு என் வீட்டில் வந்து என் மகனை மிரட்டி வெற்று பத்திரத்தில்

கையொப்பம் பெற்றார் அதற்காக புகார் கொடுத்தேன். CSR கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, ஆனால் காவலர்கள் விசாரித்தார்கள்.

3) எந்த எந்த தேதிகளில் பணம் திருப்பி செலுத்தினேன் மற்றும் முழுவதுமாக பணத்தை கொடுத்துவிட்டேன் போன்ற விபரங்கள் எதுவும் எ.ம,சா.ஆ. 1 புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரின் அடிப்படையில் உள்ள விசாரணை முடிக்கப்பட்டதா என்றால் முடிக்கப்பட்டது. முழுத்தொகையும் கொடுக்கப்பட்டது என்று முடிக்கப்பட்டதா என்றால் ஆம் முழுத்தொகையும் கொடுத்தேன் என்று எழுதிக்கொடுத்து முடிக்கப்பட்டது. அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எ.ம.சா.ஆ. 2 ஆகும். நான் முழுத்தொகையையும் கொடுத்துவிட்டேன் என்று குறிப்பாக எ.ம.சா.ஆ.1 மற்றும் 2ல் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் எனது கையொப்பமா என்றால் இல்லை. கையொப்பத்தை நிபுனருக்கு அனுப்புவதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. ம.சா.ஆ–1 எனது வங்கி காசோலை என்றால் சரிதான்.

4) நான் புகார்தாரரிடம் இருந்து ரூ. 2 லட்சம் கடனாக பெற்றேன் என்றாலும் அதில் ரூ. 60 ஆயிரம் திருப்பி செலுத்தியபின்பு மீதி உள்ள ரூ. 1,40,000/–க்கு வழக்கு காசோலை கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. நான் வெறும் ரூ.60,000/– மட்டுமே கடனாக பெற்றேன். காசோலை போதிய தொகை இல்லை என்பதற்காகத்தான் திருப்பபட்டது என்றாலும், கையொப்பம் வேறுபட்டு உள்ளது என்று திருப்படவில்லை என்றாலும் சரியல்ல, அதில் உள்ள கையொப்பம் எனதில்லை. காவல் விசாரணை முடிக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். புகார்தாரரிடம் இருந்து ரூ. 2,00,000/– பெற்றேன் என்றாலும் அதற்காகத்தான் வழக்கு காசோலை கொடுத்தேன் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.14 17:28:15 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.